# மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், கொடுமுடி

முன்னிலை: திரு.G.பாண்டியராஜன், B.Com.,B.L.,
மாவட்ட உரிமையியல் நீதிபதி மற்றும்
நீதித்துறை நடுவர், கொடுமுடி.

(2056 திருவள்ளுவராண்டு ஸ்ரீவிசுவாவசு வருடம் மார்கழி திங்கள் 4ம் நாள்)
2025ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் 19ம் நாள் வெள்ளிக்கிழமை

**E.P.No.2/2020**
**CNR No.TNED13-000532-2020**
**In**
**O.S.No.159/2012**

சதாசிவம் – மனுதாரர்/வாதி

//எதிராக//

1. சேகர்
2. மாணிக்கசுந்தரம்
3. கொளந்தசாமி – எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள்

இம்மனு இந்நீதிமன்றத்தில் 16.12.2025ஆம் தேதியன்று இறுதியாக விசாரணைக்கு வந்தபொழுது மனுதாரர்/வாதி தரப்பில் வழக்கறிஞர் திரு.ஆர்.தணிகாச்சலம் அவர்கள் ஆஜராகியும், எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் தரப்பில் வழக்கறிஞர் திரு.வி.எஸ்.துரைசாமி அவர்கள் ஆஜராகியும், இரு தரப்பு வாதுரைகளை கேட்டும், ஆவணங்களைப் பரிசீலனை செய்தும், இன்று இந்நீதிமன்றம் பிறப்பிக்கும்

## உத்தரவு

இம்மனுவானது அசல் வழக்கு எண்.159/2012 வழக்கில் பிறப்பிக்கப்பட்ட தீர்ப்பு மற்றும் தீர்ப்பாணையின்படி உத்தரவை நிறைவேற்ற கேட்டு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

1. இம்மனுவின் மனுதாரர் அசல் வழக்கில் வாதி/தீர்ப்பாணை பெற்றவர் ஆவார். எதிர்மனுதாரர்கள் மூவரும் அசல் வழக்கில் பிரதிவாதிகள்/தீர்ப்பு கடனாளிகள் ஆவார்கள்.

Digitally signed by PANDIARAJAN
PANDIARAJAN
Date: 2025.12.19 16:22:10 +0530

2. மனுதாரர் தரப்பில் அசல் வழக்கில் பிறப்பிக்கப்பட்ட தீர்ப்பாணையின் 6வது ஷரத்தின்படி 2ம் எதிர்மனுதாரர் தாவா "டி" அட்டவணை வாய்க்காலை அது முன்பிருந்த நிலைக்கே 3 மாத காலத்திற்குள் சரி செய்து கொடுக்க உத்தரவிடப்பட்டது என்றும், ஆனால் 2ம் எதிர்மனுதாரர் அவற்றை முன்பிருந்த நிலைக்கே அமைத்துக் கொடுக்காமல் இருந்து வருவதாக கூறி அவற்றை முன்பிருந்த நிலைக்கே அமைத்துக் கொடுக்க உத்தரவிடக் கோரியுள்ளார்.

3. எதிர்மனுதாரர்கள் தரப்பில் மேற்படி அசல் வழக்கில் பிறப்பிக்கப்பட்ட தீர்ப்பாணை மீது இரண்டாவது மேல்முறையீடு தாக்கல் செய்துள்ளதாகவும், அதனால் இரண்டாவது மேல்முறையீட்டு வழக்கு முடியும் வரை விசாரணை நீதிமன்றத்தின் தீர்ப்பை நிறுத்தி வைக்க வேண்டுமென கூறப்பட்டுள்ளது.

4. வழக்கு ஆவணங்கள் பரிசீலனை செய்யப்பட்டது. இரு தரப்பும் கேட்கப்பட்டது. அசல் வழக்கில் மனுதாரர் கூறியவாறு கடந்த 15.06.2017ம் தேதியன்று மனுதாரருக்கு ஆதரவாக தீர்ப்பு மற்றும் தீர்ப்பாணை வழங்கப்பட்டுள்ளது. அதில் ஆறாவது உத்தரவில் தாவா "டி" அட்டவணை வாய்க்காலை அது முன்பிருந்த நிலைக்கே 2ம் பிரதிவாதி 3 மாத காலத்திற்குள் சரி செய்து கொடுக்க வேண்டுமென உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. ஆனால் அவ்வாறு 2ம் பிரதிவாதி முன்பிருந்த நிலைக்கே அமைத்துக் கொடுக்கவில்லை என கூறி இந்த மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. எதிர்மனுதாரர்கள் ஏ.எஸ்.எண்.46/2017 என்ற எண்ணில் முதலாம் மேல்முறையீடு தாக்கல் செய்யப்பட்டு 01.08.2019ம் தேதி தள்ளுபடி செய்யப்பட்டதாக மனுதாரர் தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. மேற்படி விபரத்தை எதிர்மனுதாரர்கள் மறுக்கவில்லை. மாறாக S.A.No.1198/2019 என்ற எண்ணில் இரண்டாம் மேல்முறையீடு தாக்கல் செய்துள்ளதாகவும், இரண்டாம் மேல்முறையீட்டு வழக்கு முடியும் வரை E.P.No.2/2020ன் விசாரணையை நிறுத்தி வைக்குமாறு எதிர்மனுதாரர்கள் தரப்பில் கூறப்பட்டுள்ளது. ஆவணங்களை பரிசீலனை செய்ததில் இரண்டாம் மேல்முறையீட்டு வழக்கானது 12.09.2025ம் தேதி தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது. இந்நிலையில் தடை உத்தரவு எதுவும் இல்லாத நிலையில்

Digitally signed by PANDIARAJAN Date: 2025.12.19 16:22:20 +0530

PANDIARAJAN

ஏற்கனவே பிறப்பிக்கப்பட்ட தீர்ப்பு மற்றும் தீர்ப்பாணையின் அடிப்படையில் 2ம் பிரதிவாதி மேற்படி தாவா "டி" அட்டவணை வாய்க்காலை அது முன்பிருந்த நிலைக்கே சரி செய்து கொடுக்க வேண்டுமென உத்தரவிட வேண்டியது அவசியம் ஆகும். எனவே மேற்படி பரிசீலனைகளின் அடிப்படையில் தாவா "டி" அட்டவணை வாய்க்காலை அது முன்பிருந்த நிலைக்கே 2ம் பிரதிவாதி சரி செய்து கொடுக்க உத்தரவிடப்படுகிறது. மேற்படி உத்தரவை நிறைவேற்ற வாய்தா 12.01.2026.

இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்தாளருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் பிழை நீக்கம் செய்யப்பட்டு இன்று 2025ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் 19ம் நாள் என்னால் திறந்த நீதிமன்றத்தில் அவையறியப் பகரப்பட்டது.

PANDIARAJAN Digitally signed by PANDIARAJAN Date: 2025.12.19 16:22:29 +0530

மாவட்ட உரிமையியல் நீதிபதி மற்றும்

நீதித்துறை நடுவர், கொடுமுடி.

மனுதாரர், எதிர்மனுதாரர்கள் தரப்பில் சாட்சிகள், சான்றாணவங்கள் – இல்லை –

PANDIARAJAN Digitally signed by PANDIARAJAN Date: 2025.12.19 16:22:39 +0530

மாவட்ட உரிமையியல் நீதிபதி மற்றும்

நீதித்துறை நடுவர், கொடுமுடி.